RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்


DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-16 | 16 ஜனவரி | வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ஆராய்ச்சி மாணவிக்கு பாலியல் தொந்தரவு அளிக்கப்பட்ட விவகாரம்: சென்னை ஐஐடி விளக்கம்





சென்னை, ஜன.16

ஆராய்ச்சி மாணவி ஒருவர் துன்புறுத்தலுக்கு உள்ளானது குறித்து சென்னை ஐஐடி விளக்கம் அளித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை ஐஐடி வெளியிட்டுள்ள அறிக்கையில், “நேற்று (ஜன. 14) மாலை 5.30 மணியளவில், வேளச்சேரி தரமணி பகுதியில் உள்ள ஒரு தேநீர் கடையில், சென்னை ஐஐடி ஆராய்ச்சிமாணவி ஒருவர் துன்புறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. அந்த மாணவியுடன் சென்ற ஆண் மாணவர்களும், சம்பவ இடத்தில் இருந்த பொது மக்களும், குற்றவாளியைப் பிடித்து காவல்துறைக்கு தகவல் கொடுத்துள்ளனர். போலீஸார் குற்றம் சாட்டப்பட்டவரைப் பிடித்து சென்னை ஐஐடிக்கு தகவல் தெரிவித்தனர். குற்றம் சாட்டப்பட்டவர் சென்னை ஐஐடி வளாகத்துக்கு வெளியே ஒரு பேக்கரியில் பணிபுரிகிறார். அவருக்கு சென்னை ஐஐடி உடன் எந்தத் தொடர்பும் இல்லை.

சென்னை ஐஐடி வளாகம் முழுவதும் சிசிடிவி கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளன. வளாகத்துக்குள் குடியிருப்பவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் வெளியே செல்லும் போது முன்னெச்சரிக்கையுடன் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். பாதிக்கப்பட்ட மாணவிக்கு தேவையான அனைத்து ஆதரவையும் சென்னை ஐஐடி வழங்குகிறது.” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தங்கம் விலை மீண்டும் உயர்வு: இன்றைய நிலவரம் என்ன?



சென்னை, ஜன.16

தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இதனால், தங்கம் விலை மீண்டும் ஒரு பவுன் ரூ.59,000 என்ற நிலையை கடக்கும் சூழல் உருவாகியுள்ளது.

சர்வதேசப் பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப இந்தியாவில் தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது. கடந்த ஆண்டு தீபாவளியின்போது அதிகபட்சமாக ஒரு பவுன் ரூ.59 ஆயிரத்துக்கு விற்பனையானது. பின்னர், தங்கம் விலை குறையத் தொடங்கியது. கடந்த டிச. 25ம் தேதி ஒரு பவுன் தங்கம் ரூ.56,800க்கு விற்பனையானது.

பின்னர் மீண்டும் படிப்படியாக அதிகரித்து வருகிறது. அதன் படி, சென்னையில் இன்று (ஜன.15) தங்கம் விலை கிராமுக்கு ரூ.10 அதிகரித்து ரூ.7,340க்கும், பவுனுக்கு ரூ.80 அதிகரித்து ரூ.58,720க்கும் விற்பனையாகிறது. வெள்ளியின் விலை கிராமுக்கு ரூ.1 உயர்ந்து ஒரு கிராம் ரூ.101க்கு விற்பனையாகிறது. பண்டிகை காலம், டாலர் மதிப்பு உயர்வு, அமெரிக்க அதிபர் பதவியேற்பு நெருங்குவது போன்ற காரணங்களால் தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

கடைசியாக கடந்த அக்டோபரில் தங்கம் விலை பவுன் ரூ.59,640க்கு விற்பனையானதே உச்சமாக இருந்த நிலையில் மீண்டும் அதையே நோக்கி தங்கம் விலை பயணிக்கிறது என்று கூறலாம்.

## டெல்லியில் காங்கிரஸ் புதிய தலைமையகம் ‘இந்திரா பவனை’ திறந்து வைத்த சோனியா காந்தி



புதுடெல்லி, ஜன.16

காங்கிரஸ் கட்சியின் புதிய தலைமையகமான ‘இந்திரா பவனை’ அக்கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவர் சோனியா காந்தி திறந்து வைத்தார்.

எண் 24, அக்பர் சாலை, புதுடெல்லி என்ற முகவரியில் காங்கிரஸ் கட்சியின் தலைமையகம் ஏற்கனவே இயங்கி வந்தது. இந்நிலையில், கட்சிக்கு புதிய தலைமை அலுவலகம் 9கி, கோட்லா சாலை, புதுடெல்லி என்ற முகவரியில் கட்டப்பட்டு இன்று திறக்கப்பட்டது. மறைந்த காங்கிரஸ் தலைவரும், முன்னாள் பிரதமருமான இந்திரா காந்தியின் நினைவாக ‘இந்திரா பவன்’ என இந்த தலைமையகத்துக்கு பெயர் வைக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உடன் இணைந்து ரிப்பன் வெட்டி தலைமையகத்தை சோனியா காந்தி திறந்துவைத்தார். இவ் விழாவில், காங்கிரஸ் மூத்த தலைவர்கள் ராகுல் காந்தி, கே.சி. வேணுகோபால், கர்நாடக துணை முதல்வர் டி.கே. சிவகுமார், பிரியங்கா காந்தி, சச்சின் பைலட் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, கட்சித் தலைமையகத்தில் அமைக்கப்பட்டுள்ள மிகப் பெரிய கொடிக் கம்பத்தில் காங்கிரஸ் கொடியை மல்லிகார்ஜுன கார்கே ஏற்றினார். இதனைத் தொடர்ந்து கட்சி அலுவலகத்துக்குள் மல்லிகார்ஜுன கார்கே, சோனியா காந்தி உள்ளிட்டோர் கட்சி குத்து விளக்கேற்றினர்.

நிகழ்ச்சியில் பேசிய ராகுல் காந்தி, “மிகவும் முக்கியமான ஒருதருணத்தில் நாம் நமது புதிய தலைமையகத்தைத் திறந்து வைத்துள்ளோம். ஆர். எஸ்.எஸ் தலைவர் மோகன் பாகவத் நேற்று பேசும்போது, 1947ல் இந்தியா உண்மையான சுதந்திரத்தை அடையவில்லை; அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்பட்டபோதுதான் நாடு உண்மையான சுதந்திரத்தை அடைந்தது என்று கூறி இருந்தார்.

இந்தக் கட்டிடம் சாதாரணமானது அல்ல. இது இந்த நாட்டின் மண்ணிலிருந்து எழுந்தது. இது லட்சக்கணக்கான மக்களின் கடின உழைப்பு மற்றும் தியாகத்தின் விளைவு. சுதந்திரப் போராட்டத்தின் மிகப் பெரிய பலன் நமது அரசியலமைப்பு ஆகும். மோகன் பகவத் நேற்று பேசும்போது, அரசியலமைப்பு நமது சுதந்திரத்தின் சின்னம் அல்ல என்று மறைமுகமாக விமர்சித்தார். காங்கிரஸ் கட்சி எப்போதும் உயர் மதிப்பீடுகளைக் காக்க பாடுபட்டு வருகிறது. அத்தகைய மதிப்பீடுகள், இந்தக் கட்டிடத்தில் பிரதிபலிக்கப்படுவதைக் காணலாம்“ எனத் தெரிவித்தார்.

புதிய தலைமையகம் குறித்து மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “காங்கிரஸ் கட்சியின் புதிய தலைமையகமான “இந்திரா பவன்” ஜனநாயகம், தேசியவாதம், மதச்சார்பின்மை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் சமூக நீதி ஆகியவற்றின் அடித்தளத்தில் கட்டப்பட்டுள்ளது. இந்திய தேசிய காங்கிரஸின் 140 ஆண்டுகால புகழ்பெற்ற வரலாற்றை அடையாளப்படுத்தும் விதமாக இங்குள்ள சுவர்கள் உண்மை, அகிம்சை, தியாகம், போராட்டம் மற்றும் தேசபக்தி ஆகியவற்றின் மகத்தான கதையை விவரிக்கின்றன” என்று குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் புதிய தலைமையகத்தைத் திறப்பதற்கு முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவர் சச்சின் பைலட், “இது ஒரு புதிய தொடக்கம். எங்களுக்கு ஒரு புதிய தலைமையகம் கிடைத்ததில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இது கட்சிக்கும் நாட்டிற்கும் சிறந்த விஷயங்களைக் கொண்டுவரும் என்று நம்புகிறேன்” என்று தெரிவித்துள்ளார். கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமார் கூறுகையில், “இது எங்கள் கனவு, இது எங்கள் கோயில். இன்று இங்கு இருப்பதில் நாங்கள் மிகவும் பெருமைப் படுகிறோம்.” என கூறினார்.

## கடவுள் காப்பாற்றுவார்’ தனக்கெதிரான தாக்குதல் அச்சுறுத்தல் குறித்து கெஜ்ரிவால் கருத்து



புதுடெல்லி, ஜன.16

தனக்கு எதிரான அச்சுறுத்தல் குறித்த உளவுத்துறையின் தகவல் குறித்து கருத்து தெரிவித்துள்ள ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால், ‘கடவுள் என்னைக் காப்பாற்றுவார்’ என்று தெரிவித்துள்ளார்.

ஆம் ஆத்மி கட்யின் தேசிய ஒருங்கிணைப்பாளரும், புது டெல்லி தொகுதி வேட்பாளருமான அரவிந்த் கெஜ்ரிவால் இன்று தனது வேட்பு மனுவினைத் தாக்கல் செய்கிறார். முன்னதாக அவர் தனது மனைவியுடன் கன்னாட் பிளேஸில் உள்ள பிரச்சீன் அனுமன் கோயிலில் சாமி தரிசனம் செய்தார். வேட்பு மனு தாக்கலுக்கு முன்பு செய்தியாளர்களிடம் பேசிய அவரிடம் உளவுத்துறையின் தாக்குதல் அச்சுறுத்தல் குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதில் அளித்த கெஜ்ரிவால் “கடவுள் என்னைக் காப்பாற்றுவார்” என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, உளவுத் துறை யானது டெல்லி பேரவைத் தேர்தலுக்கு முன்பாக ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங் கிணைப்பாளரான அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு எதிராக தாக்குதல் நடத்தும் அபாயம் இருப்பதாக எச்சரித்துள்ளது.

இதனிடையே, டெல்லி மது பான கொள்கை ஊழல் தொடர் பாக கெஜ்ரிவால் மீது வழக்கு தொடர அமலாக்கத் துறைக்கு மத்திய உள்துறை அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது. அவர் மீது வழக்கு தொடர அம லாக்க துறைக்கு டெல்லி துணை நிலை ஆளுநர் வி.கே. சக்சேனாவின் அனுமதி வழங்கியிருந்த நிலையில் உள்துறை அமைச்சகம் இந்த இசைவினைத் தெரிவித்துள்ளது.

முன்னதாக, கடந்த நவம்பர் 6ம் தேதி உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி (சிஆர்பிசி), அரசின் முன் அனுமதி பெறாமல், அரசு ஊழியர் ஒருவரை பணமோசடி வழக்கின் கீழ் கைது செய்ய முடியாது என்று தெரிவித்திருந்தது. முன்பு, அரசு ஊழியர்களுக்கு எதிராக அமலாக்கத் துறை வழக்குத் தொடர்வதற்கு அரசின் அனுமதி தேவையில்லை. அவை சிபிஐ மற்றும் மாநில காவல் துறை போன்ற பிற விசாரணை அமைப்புகளுக்கே கட்டாயமாக்கப்பட்டிருந்தது. இந் நிலையில் இந்தத் தீர்ப்பின்படி கெஜ்ரிவால் மீது வழக்கு தொடர அனுமதிகோரி, துணைநிலை ஆளுநர் வி.கே.சக்சேனாவுக்கு அமலாக்க துறை கடிதம் எழுதியிருந்தது. அவரும் அதற்கு ஒப்புதல் தெரிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து டெல்லி மதுபான கொள்கை ஊழல் தொடர்பாக ஆம் ஆத்மி கட்சியின் தலைமை ஒருங் கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் மீது வழக்கு தொடர அமலாக்கத் துறைக்கு மத்திய உள்துறை அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது.

## அவனியாபுரம் ஜல்லிக்கட்டு: மாடு முட்டியதில் காயமடைந்த வீரர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழப்பு



மதுரை, ஜன.16

மதுரை அவனியாபுரத்தில் நடந்து வரும் ஜல்லிக்கட்டுப் போட்டியில் மாடு முட்டியதில் காயமடைந்த மாடுபிடி வீரர் நவீன் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மதுரை மாவட்டம் அவனியாபுரம், பாலமேடு மற்றும் அலங்காநல்லூரில் நடைபெறும் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் உலகப்புகழ் பெற்றவை. இந்த ஆண்டு பொங்கலை ஒட்டி முதல் ஜல்லிக்கட்டுப் போட்டி மதுரை அவனியாபுரத்தில் காலை 6.30 மணிக்கு தொடங்கியது. இந்தப் போட்டியை தமிழக பத்திரப்பதிவு மற்றும் வணிக வரித்துறை அமைச்சர் மூர்த்தி தொடங்கி வைத்தார்.

10 சுற்றுகள் நிறைவு: அவனியா புரம் ஜல்லிக்கட்டில் இதுவரை 10 சுற்றுகள் முடிவடைந்துள்ளது. இதில், 20 மாடுபிடி வீரர்கள், 17 காளை உரிமையாளர்கள், பார்வையாளர்கள் 6 பேர் உட்பட மொத்தம் 43 பேர் இதுவரை காயமடைந்துள்ளனர். ஆக்ரோஷத்துடன் சீறிப் பாய்ந்த காளைகள் முட்டியதில், 12 பேர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

மாடுபிடி வீரர் உயிரிழப்பு: அவனியாபுரத்தில் நடந்த ஜல்லிக்கட்டுப் போட்டியில் மதுரை விளாங்குடியைச் சேர்ந்த நவீன் கலந்து கொண்டிருந்தார். களத்தில் சீறிப்பாய்ந்த காளை ஒன்று நவீனின் மார்பில் முட்டியது. இதில் பலத்த காயமடைந்த நவீனை, ரத்தக் காயங்களுடன் அங்கிருந்த மருத்துவக் குழுவினர் மீட்டு, மேல் சிகிச் சைக்காக அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு நவீனுக்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் வென்டி லேட்டர் உதவியுடன் சிகிச்சை யளிக்கப்பட்டது. ஆனால், சிகிச்சைப் பலனின்றி மாடுபிடி வீரர் நவீன் உயிரிழந்தார். இந்த சம்பவம் அந்தப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி யுள்ளது.

காவல்துறையினர் காயம்: அதேபோல், அவனியாபுரத்தில் அமைக்கப்பட்டிருந்த ஜல்லிக்கட்டு தடுப்புகள் இடிந்ததில் சிறப்பு உதவி ஆய்வாளர், காவலர்கள் இருவர் உட்பட மூன்று பேர் காயம் அடைந்தனர். அவனியாபுரம் ஜல்லிக்கட்டின் இறுதி சுற்றுப் போட்டிகள் விறுவிறுப்புடன் நடந்து வருகிறது. இறுதிச் சுற்றுப் போட்டியில், ஏற்கெனவே வெவ்வேறு சுற்றுகளில் வெற்றி பெற்றுள்ள 30 வீரர்கள் களம் கண்டுள்ளனர்.




# மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு காட்சிகள்...























# மதுரை பாலமேடு ஜல்லிக்கட்டு காட்சிகள்...











# ‘சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா’ கிராமியக் கலைஞர்களுக்கு ஒருநாள் ஊதியம் ரூ.5000 ஆக உயர்வு



சென்னை, ஜன.16

சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவில் பங்கேற்றுள்ள கிராமியக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஒரு நாள் ஊதியத்தை ரூ.5000 ஆக உயர்த்தி வழங்க முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

சென்னை கீழ்ப்பாக்கம் பெரியார் ஈ.வெ.ரா நெடுஞ்சாலையில் உள்ள ஏகாம்பரநாதர் ஆலயத்திடலில், தமிழ் மண்ணின் கலைகளை களிப்போடு கொண்டாடும் வகையில் சென்னை மாநகரில் பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளுடன் கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் நடத்தப்படும் ‘சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா’வை முதல்வர் ஸ்டாலின் முழவு இசைத்து திங்கள்கிழமை (ஜன.13) தொடங்கி வைத்தார்.

சென்னையில் உள்ள 18 இடங்களில் நான்கு நாட்கள் நடைபெறும் இந்நிகழ்ச்சி பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது. இதில் தற்போது 1500 கிராமியக்கலைஞர்கள் பங்கேற்றுள்ளனர். இவர்கள் 75 கலைக் குழுக்களாக பிரிந்து 50 வெவ்வேறு கலை வடிவங்களை நிகழ்த்தி வருகின்றனர். சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவில் பங்குபெறும் கிராமியக் கலைஞர்களுக்கு தங்கும் இடம், உணவு, 2 உடைகள், போக்குவரத்து வசதிகள் உட்பட அனைத்தும் தமிழ்நாடு அரசால் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இது தவிர அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஒரு நாள் ஊதியம் ரூ.5000 ஆக உயர்த்தி வழங்க முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

# இந்திய செஞ்சிலுவை சங்கம் காளையார்கோவில் கிளை சார்பாக நலத்திட்ட உதவிகள் வழங்கல்

காளையார் கோவில் ஜன.16

இந்திய செஞ்சிலுவை சங்கம் காளையார்கோவில் கிளை சார்பாக நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.



சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் இந்திய செஞ்சிலுவை சங்கம் காளையார்கோவில் கிளை சார்பாக நலத்திட்ட உதவிகள் காளையார்கோவில் அரசு மேல்நிலைப்பள்ளி கூட்டரங்கில் நடைபெற்றது.

இந்திய செஞ்சிலுவை சங்க காளையார்கோவில் கிளைச் சேர்மன் தெய்வீக சேவியர் தலைமை வகித்து தலைமை உரையாற்றினார். இந்திய செஞ்சிலுவை சங்க சிவகங்கை கிளைச் சேர்மன் சுந்தரராமன் காரைக்குடி மகரிஷி வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் தாளாளர் முனைவர் சேதுராமன் பள்ளியின் தலைமை ஆசிரியை லதா முன்னிலை வகித்தனர்.

கிளைச் செயலாளர் அலெக்ஸாண்டர் துரை வரவேற்றார். சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்துயில் அணிவிக்கப்பட்டு புத்தகம் நினைவு பரிசு வழங்கப்பட்டது. இந்திய செஞ்சிலுவை சங்க இரத்த தானம் செயல்பாடுகள் குறித்து சிவகங்கை சேர்மன் நல்லாசிரியர் சுந்தர்ராமன் சிறப்புரையாற்றினார். சிவகங்கை கிளை துணை சேர்மன் முத்துப்பாண்டி வாழ்த்துரை வழங்கினார்.

பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் உள்ள 15 பயனாளிகளுக்கு இந்திய செஞ்சிலுவை சங்க தலைமையகத்திலிருந்து பெறப்பட்ட அரிசி போர்வை துண்டு மளிகை சாமான்கள் வழங்கி மகிழ்ந்தனர்.

காளையார்கோவில் கிளை துணைச் சேர்மன் நாக ராஜன் நன்றி கூறினார். இந்திய செஞ்சிலுவை சங்க காளையார் கோவில் கிளை துணைத் தலைவர் ஆரோக்கியசாமி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

பொருளாளர் ராமநாதன் செயற்குழு உறுப்பினர்கள் சூசை ஆரோக்கிய மலர் சுரேஷ் டேவிட் நாகலிங்கம் பாலசுப்பிரமணியன் ஆசிரியை ரோசாலி ஆசிரியர் பால் ஜோசப் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# சிராவயல் மற்றும் கண்டிப்பட்டி கிராமத்தில் நடைபெறவுள்ள மஞ்சுவிரட்டு நிகழ்ச்சியை முன்னிட்டு மதுபானக்கடை மூடல்

சிவகங்கை ஜன.16



சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை கோட்டம், திருப்பத்தூர் வட்டம், சிராவயல் கிராமத்தில் 16.01.2025 அன்றும், காளையார்கோவில் வட்டம், கண்டிப்பட்டி கிராமத்தில் 18.01.2025 அன்று நடைபெற உள்ள மஞ்சுவிரட்டு நிகழ்ச்சியை முன்னிட்டு அரசு மதுபானக்கடைகள் மற்றும் தனியார் மதுபானக் கூடத்தினை பொது அமைதி, சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்படாமல் இருப்பதற்கு ஏதுவாக 16.01.2025 அன்றும் 18.01.2025 அன்றும் குறிப்பிடப்பட்டுள்ள மதுபானக் கடைகள் மூடப்படும்.

16.01.2025 அன்று திருப்பத்தூர் காவல் சரக எல்லைக்குட்பட்ட மின் நகர் அரசு மதுபானக் கடை எண்:7571 மற்றும் பைரவர் கோவில் அருகில், காரைக்குடி ரோடு அரசு மதுபானக் கடை எண்: 7740, திருக்கோஷ்டியூர் காவல் சரகத்திற்குட்பட்ட வனியன்காடு அரசு மதுபானக் கடை எண்:7573, நாச்சியார்புரம் காவல் சரகத்திற்குட்பட்ட சிராவயல் அரசு மதுபானக் கடை எண்: 7734 மற்றும் திருப்பத்தூர் தி/ள். கேசினோ ராயல் ரெக்ரியேசன் கிளப், தனியார் மதுபானக் கூடமும் மூடப்படும்.

அதேபோன்று, 18.01.2025 அன்று மதகுபட்டி காவல் சரக எல்லைக்குட்பட்ட கொலக் கட்டபட்டி ரோடு, ஒக்கூர் அரசு மதுபானக் கடை எண்: 7705 மற்றும் பாகனேரி அரசு மதுபானக் கடை எண்: 7707, காளையார்கோவில் காவல் சரக எல்லைக்குட்பட்ட கொல்லங்குடி அரசு மதுபானக் கடை எண்: 7694 குறிப்பிட்ட தினங்களில் மட்டும் முழுவதுமாக மூடப்படும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

# பெருங்களத்தூர் வடக்கு பகுதி 49வது வட்ட கழகம் சார்பில் பொங்கல் விழா நிகழ்ச்சி

தாம்பரம், ஜன.16



பெருங்களத்தூர் வடக்கு பகுதி 49வது வட்ட கழக சார்பில் பொங்கல் விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

தாம்பரம் மாநகர பெருங்களத்தூர் வடக்கு பகுதி 49வது வட்ட திமுக சார்பில் தமிழர் திருநாள் பொங்கல் விழா கஸ்தூரி பாய்நகர், காட்டு கருமாரியம்மன் கோயில் அருகில் பகுதி கழக செயலாளர் 4வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ் தலைமையிலும் வட்ட பிரதிநிதி ஆர். சீனா வரவேற்பிலும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி ஆகியோர் கலந்து கொண்டு சமத்துவ பொங்கல் மற்றும் பல்வேறு விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்கள். உடன் முன்னாள் பேச்சாளர் எஸ்.ஜி. கருணாகரன், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜேஷ் சர்தார், கார்த்திக் உட்பட பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்..

# வேலூர் மாவட்ட காவல்துறையின் சார்பில் எஸ்.பி. தலைமையில் பிரம்மாண்டமான பொங்கல் விழா

வேலூர் ஜன15



வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, நேதாஜி மைதானம், வேலூர் மாவட்ட காவல் துறையின் சார்பில் அரசு துறைகளில் யாரும் நடத்திடாத வகையில் அனைவரையும் குடும்பத்துடன் வரவேற்று வரவைத்து பிரம்மாண்டமான முறையில் பல்வேறு பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மதிவாணன் தலைமையில் பொங்கல் விழாவானது நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பங்கேற்று சிறப்பித்தனர். இதில் காவல்துறையினரும் குடும்பத்தினருடன் பங்கேற்று உற்சாகமாக பொங்கல் வைத்து பொங்கலோ பொங்கல் என கோஷங்களை எழுப்பி, பாரம்பரிய சிறப்பு பூஜைகள் செய்து மகிழ்ச்சியுடன் பொங்கலிட்டனர். மேலும், மியூசிக்கல் சேர், குதிரை சவாரி, சிலம்பாட்டம், பரதநாட்டியம் உள்ளிட்ட பல கலை நிகழ்ச்சிகளுடன், குழந்தைகள் விளையாட ஸ்லைடர், பலூன் சுடுதல் போன்றவற்றையும், குடும்பத்துடன் வருகை புரிந்த அனைவருக்கும் வரவேற்பை சிறப்பிக்கும் வகையில், டீ, காபி, சமோசா, பொங்கல் என்றாலே சிறப்பு வாய்ந்த கரும்பு, ஐஸ் கிரீம், பானி பூரி, மசால் பூரி, பாப்கான், பஞ்சு மிட்டாய் என தனித்தனி அமைப்பில் பல்வேறு ஸ்டால்கள் அமைத்து இதுவரை அரசு துறைகளில் யாரும் நடத்திடாத வகையில் பிரம்மாண்டான முறையில் அனைவரின் உள்ளத்திலும் மகிழ்ச்சி பொங்கி, உண்மையான மகிழ்ச்சியை பிரதிபலிக்கும் வகையில் பொங்கல் விழா கோலாகலமாக கொண்டாடப் பட்டது. இதில் சிறப்பு அழைப்பா ளர்களாக அனைத்து பத்திரிகை ஊடகங்கள் தொலைக் காட்சி ஊடகங்கள் மற்றும் பொது மக்கள் என அனைவரும் பங்கேற்று விழாவை சிறப்பித்தனர்.

# தை திருநாள் பொங்கல் நாளில் மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகம் வழங்கிய பா.ம.கவினர்

தாம்பரம் ஜன15





பல்லாவரம் அடுத்த கவுல் பஜார் ஊராட்சி அலுவலகம் அருகே தைப்பொங்கல் முன்னிட்டு பாட்டாளி மக்கள் கட்சி கொடி ஏற்று இனிப்பு மற்றும் மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகம் பேனா, மற்றும் கல்வி உபகரண பொருள்கள் வழங்கும் நிகழ்ச்சி தாமஸ்மலை ஒன்றியம் பா.ம.க தலைவர் கவுல்பஜார் பாபு தலைமையில் நடைபெற்றது சிறப்பு அழைப்பாளர்களாக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட செயலாளர் கீழ்கட்டளை இரா. வெங்கடேசன், பசுமைத்தாயகம் மாநில துணைச் செயலாளர் ஐ.நா.கண்ணன்,

வன்னியர் சங்கம் மாவட்ட செயலாளர் முரசு இராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் பூக்கடை முனுசாமி, மாவட்ட துணைத் தலைவர் கணபதி, ஒன்றிய செயலாளர் மணிகண்டன், விநாயகம், ஏர்போட் செல்வக்குமார், துரை எம்.சி, முகுந்தன், ரமேஷ், நாராயணன், கண்ணன், வெங்கடேசன், தியாகு மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# இளையான்குடியில் சமத்துவ பொங்கல் கொண்டாடிய எம்.எல்.ஏ

மானாமதுரை ஜன.16







சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தொகுதி இளையான்குடி பேரூர் M.N.A.S நடுநிலைப் பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இளையான்குடி வடக்கு ஒன்றிய செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப.மதியரசன், இளையான்குடி பேரூராட்சி தலைவர் நஜுமுதீன் கிழக்கு ஒன்றிய செயலாளர் தமிழ்மாறன் பள்ளி தாளாளர் முகமது கனி பேரூராட்சி துணைத் தலைவர் டிகே இப்ராகிம் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் காளிமுத்து மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் இஸ்ரின் பேகம் பள்ளி முதல்வர் சத்யா தேவி கண்ணமங்கலம் கூட்டுறவு கடன் சங்கத் தலைவர் சுப.தமிழரசன் மானாமதுரை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கண்ணன் ஒன்றிய துணை செயலாளர் சிவனேசன், இராஜேந்திரன் ஒன்றிய பொருளாளர் முருகேசன்

பேரூர் கவுன்சிலர்கள் O.A.தெளலத், நடராஜன், கிருஷ்ணவேணி, சவுரியாத் பேகம், இராஜவேலு பேரூர் நிர்வாகிகள் ஜெயினுலாபுதீன், D.M.A ரவூப் இபுராஹிம் ஷா ஒன்றிய நிர்வாகிகள் சத்தியேந்திரன், ஜெயராமன், சுதர்ஷன் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ராஜா மற்றும் நிர்வாகிகள் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# செங்கல்பட்டு 17வது வார்டு திமுக சார்பில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

பல்லாவரம் ஜன 15





செங்கல்பட்டு 17வது வார்டு திமுக சார்பில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட 17வது வார்டு திமுக வழக்கறிஞர் பி.ஜி.பிரபு அவர்கள் ஏற்பாட்டில் இரு வன்னக்கொடியேற்றி வைத்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி சுமார் 700 நபர்களுக்கு பேண்ட், ஷர்ட், புடவை, உள்ளிட்ட உதவிகளை வழங்கினார் அதனை தொடர்ந்து

அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களுடன் இணைந்து மேளதாளம் முழுக்க ஊர்வலமாக நடந்து சென்று உற்சாகமாக பொங்கல் கொடுத்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர்

இதில் தாம்பரம் மாநகர அணிகளின் துணை அமைப்பாளர்கள், 17வது வார்டு நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஊராட்சி ஒன்றியம் கீழநெட்டூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை பள்ளியின் பொறுப்பு தலைமை ஆசிரியர் மல்லிகா தலைமையில் ஆசிரியர்கள் செய்திருந்தனர். பொங்கல் வைத்து வழிபாடு செய்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு வழங்கப்பட்டது.

# ‘சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா’ கிராமியக் கலைஞர்களுக்கு ஒருநாள் ஊதியம் ரூ.5000 ஆக உயர்வு



சென்னை, ஜன.16

சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவில் பங்கேற்றுள்ள கிராமியக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஒரு நாள் ஊதியத்தை ரூ.5000 ஆக உயர்த்தி வழங்க முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

சென்னை கீழ்ப்பாக்கம் பெரியார் ஈ.வெ.ரா நெடுஞ் சாலையில் உள்ள ஏகாம்பரநாதர் ஆலயத் திடலில், தமிழ் மண்ணின் கலைகளை களிப்போடு கொண்டாடும் வகையில் சென்னை மாநகரில் பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளுடன் கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் நடத்தப்படும் ‘சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா’ வை முதல்வர் ஸ்டாலின் முழவு இசைத்து திங்கள்கிழமை (ஜன.13) தொடங்கி வைத்தார்.

சென்னையில் உள்ள 18 இடங்களில் நான்கு நாட்கள் நடைபெறும் இந்நிகழ்ச்சி பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது. இதில் தற்போது 1500 கிராமியக்கலைஞர்கள் பங்கேற்றுள்ளனர். இவர்கள் 75 கலைக் குழுக்களாக பிரிந்து 50 வெவ்வேறு கலை வடிவங்களை நிகழ்த்தி வருகின்றனர். சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவில் பங்குபெறும் கிராமியக் கலைஞர்களுக்கு தங்கும் இடம், உணவு, 2 உடைகள், போக்குவரத்து வசதிகள் உட்பட அனைத்தும் தமிழ்நாடு அரசால் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இது தவிர அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஒரு நாள் ஊதியம் ரூ.5000 ஆக உயர்த்தி வழங்க முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

# போடியில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பிறந்தநாள் விழா





தேனி.ஜன.16

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் நகர் வடக்கு அதிமுக செயலாளர் ஜெயராம் பாண்டியன் தலைமையிலும் அவருடைய முயற்சியிலும் சிறப்பாக பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. போடி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிகோவிலில் போடி இளைய ஜமீன்தார் பரம்பரை அறங்காவல் திரு. முத்துராஜ் அவர்கள் முன்னிலையில் காலை பூஜை வழிபாட்டுடன் தொடங்கியது. காலையிலிருந்து நண்பகல் வரை வந்திருந்த அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. முன்னாள் தேனி நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் ரவீந்திரநாத் மற்றும் மாவட்டச் செயலாளர் எஸ். பி. எம். சையதுகான் வழிகாட்டுதல் படி போடி நகர் வடக்கு மாவட்ட செயலாளர் ஜெயராம் பாண்டி இதற்கான சிறப்பான ஏற்பாடுகள் செய்திருந்தார் விழாவில் ஏராளமான தொண்டர் உரிமை மீட்பு குழு இளைஞர் அணி மகளிர் அணி மற்றும் முன்னாள் முதல்வர் ஓ பன்னீர்செல்வம் அவர்களின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

# திருவாடானை அரசு கலை அறிவியல் கல்லூரியில் சமத்துவ பொங்கல் விழா



திருவாடானை ஜன.16

ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 300மேற்பட்ட மாணவ மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். பொங்கல் தினத்தை முன்னிட்டு சமத்துவ பொங்கல் விழா கல்லூரி முதல்வர் முனைவர் பழனியப்பன் தலைமையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் நாட்டுப்புற கலைகளான ஒயிலாட்டம், கரகாட்டம், கும்மியாட்டம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. மாணவ மாணவிகள் மிகுந்த உற்சாகத்துடன் பாடலுக்கு ஏற்றவாறு நடனமாடி கொண்டாடினர்.இவ்விழாவில் கல்லூரி பேராசிரியர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம் பழனி நகர காவல் நிலையத்தில் காவல் துணை கண்காணிப்பாளர் தனஜெயன் தலைமையில் காவல் ஆய்வாளர் மணிமாறன் சார்பு ஆய்வாளர்கள் விஜய். தங்கராஜ் ஈஸ்வரி ஆகியோர் ஒரே சீருடை அணிந்து பொங்கல் வைத்தனர் அப்பொழுது அங்கு விரைந்து வந்த காவல் துணை கண்காணிப்பாளர் தனஜெயன் பொங்கல் நான் வைக்கின்றேன் என்று முன்வந்து செய்த சம்பவம் அக்காவல் நிலையத்தில் காவலர்கள் மத்தியில் மகிழ்ச்சியை உண்டாக்கியது.

# அண்ணா பல்கலை. விவகாரத்தில் அதிமுக பாஜக கூட்டணி மோசமான அரசியல்: அமைச்சர் கீதா ஜீவன் சாடல்

சென்னை, ஜன.16

10 வயது குழந்தையை பாலியல் சீண்டல் செய்த விவகாரத்தில் அதிமுக வட்டச் செயலாளர் கைது செய்யப்படும் போது பாஜக அமைதி காத்தது. பாஜக நிர்வாகி 15 வயது பெண் குழந்தையை பாலியல் தொல்லைக்கு ஆளாக்கிய வழக்கில் கைதாகும் போது அதிமுக அமைதி காக்கிறது. இவ்வளவு தான் அதிமுக பாஜக கூட்டணியின் சில்லறைத்தனமான அரசியல். இதைத்தான் கள்ளக் கூட்டணி என்கிறார்கள் தமிழக மக்கள் என்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறைஅமைச்சர் கீதா ஜீவன் சாடியுள்ளார்.



இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: “அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் சீண்டலுக்கு ஆளான விவகாரத்தில் கடந்த இரு வாரங்களாக மக்களைக் குழப்பி கபட நாடகம் நடத்தி வந்தன அதிமுகவும் பாஜகவும். திராவிட மாடல் ஆட்சிக்கு பெண்கள் அளிக்கும் அபரிமிதமான ஆதரவு கண்டு வயிறெரியும் பாஜக அதிமுக கள்ளக் கூட்டணி ‘தமிழகத்தில் பெண்களுக்குப் பாதுகாப்பில்லை’ எனக் கதை கட்டி விஷமத்தனமானப் பிரசாரத்தை நடத்தி வந்த நிலையில் அவர்களின் லட்சணம், சென்னை அண்ணா நகரிலும் மதுரையிலும் அவலட்சணமாக அம்பலப்பட்டு இருக்கிறது.

சென்னை அண்ணா நகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் கடந்த வாரம் அதிமுக வட்டச் செயலாளர் சுதாகர் கைது செய்யப்பட்டார். அந்த செய்தியை மறைக்க அதிமுக நடத்திய நாடகம்தான் ‘யார் அந்த சார்?’ என்பது வெட்ட வெளிச்சமானது. அதிமுகவை அடியொற்றி, அதன் கள்ளக் கூட்டாளி பாஜகவும் அடுத்து பாலியல் புகாரில் சிக்கியிருக்கிறது. பாஜகவின் மாநில பொருளாதாரப் பிரிவுத் தலைவர் எம்.எஸ்.ஷா நிகழ்த்திய பாலியல் வன்கொடுமை அம்பலத் துக்கு வந்திருக்கிறது. மதுரையைச் சேர்ந்த தனது பேத்தி வயதுடைய 15 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த புகாரில் எம்.எஸ்.ஷா கைதாகியிருக்கிறார்.

அதிமுகவின் வட்ட செயலாளர் சுதாகரும் பாஜக பொருளாதாரப் பிரிவுத் தலைவர் எம்.எஸ். ஷாவும் பெண் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமையை நிகழ்த்தி போக்சோ குற்றவாளிகளாக இருப்பது பேரவலம். இத்தகைய பாலியல் குற்றவாளிகளின் கூடாரத்தை வைத்துக் கொண்டுதான், ‘அரசியல் கோமாளி’ அண்ணாமலை நடத்திய சவுக்கடி நாடகத்தை எண்ணி, இப்போது நாட்டு மக்கள் காறி உமிழ்கிறார்கள்.

‘தமிழகத்தில் பெண்களுக்குப் பாதுகாப்பில்லை’ என வானத்துக்கும் பூமிக்கும் குதித்த தமிழிசை சவுந்தரராஜனும், குஷ்புவும் அமைதி நிலைக்குச் சென்றுவிட்டார்கள். எதுவுமே நடக்காதது போல அமைதி காக்கிறார்கள். மதுரையில் நின்று கண்ணகியைப் போலச் சிலம்பு ஏந்தி அண்ணா பல்கலைக்கழக மாணவிக்கு நீதி கேட்ட குஷ்பு, பாஜகவின் எம்.எஸ்.ஷா கைதுக்கு என்ன செய்ய போகிறார்? கண்ணகி நீதி கேட்ட மதுரையில் போராடிய குஷ்பு, அதே மதுரையில் பாஜக பிரமுகரால் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஏன் நீதி கேட்டுப் போராடவில்லை? அந்த சிலம்பு காணாமல் போய் விட்டதா?

திமுக ஆட்சிக்கு எதிரான செய்திகளுக்கு எல்லாம் எட்டிப் பார்த்து வீராவேச நடிப்பைக் காட்டும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, எம்.எஸ். ஷா பாலியல் விவகாரத்தில் ஏன் வாய் திறக்கவில்லை? எம்.எஸ்.ஷா பின்னால் இருப்பவர் எந்த சார் எனக் கேட்டு பழனிசாமி போஸ்டர் அடிப்பாரா? தனது கள்ளக் கூட்டாளி பாஜகவின் பாலியல் குற்றம் என்றதும் ஓடி ஒளிந்து விட்டாரா கோழை பழனிசாமி? கள்ள கூட்டணிக்காக பழனிசாமி நடத்தும் கள்ள மவுனமா இது?

10 வயது குழந்தையை பாலியல் சீண்டல் செய்த விவகாரத்தில் அதிமுக வட்டச் செயலாளர் கைது செய்யப்படும் போது பாஜக அமைதி காத்தது.

பாஜக நிர்வாகி 15 வயது பெண் குழந்தையை பாலியல் தொல்லைக்கு கைதாகும் போது அதிமுக அமைதி காக்கிறது. இவ்வளவுதான் அதிமுக பாஜக கூட்டணியின் சில்லறைத்தனமான அரசியல். இதைத்தான் கள்ளக் கூட்டணி என்கிறார்கள் தமிழக மக்கள்.

குரல் எழுப்பியிருக்க வேண்டும். ஆனால், அவர்கள் கூட்டணியினர் என்பதால் மூடி மறைக்கின்றனர். இப்படி தங்களுடைய அசிங்கமான அரசியலை எல்லாம் மூடி மறைக்கத்தான் கள்ளக்கூட்டணி நடத்தும் அரசியல் நாடகம் எல்லாம் மக்கள் அறிவர். அதனால் இந்த நாடகங்கள் இனி ஒரு நாளும் மக்களிடம் எடுபடாது” என்று அவர் கூறியுள்ளார்.

# சென்னை சூப்பர் கிங்ஸ் அணி சி.இ.ஓ. விஸ்வநாதனுக்கு வேலூரில் பாராட்டு விழா! சிறப்பு தபால் தலை வெளியீடு

வேலூர் ஜன15

வேலூர் மாவட்டம் இந்திய கிரிக்கெட் மற்றும் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தினை திறம் படவும், சிறப்பாகவும் வழி நடத்தியதின் மூலம் அமெரிக்க நாட்டின் அருங்காட்சியகத்தில் திருஉருவப்படம் இடம்பெற்ற தமிழ்நாடு கிரிக்கெட் சங்க முன்னாள் செயலாளரும், சென்னை சூப்பர் கிங்ஸ் (சிஷிரி) அணியின் தலைமை செயல் அலுவலருமான கே.எஸ். விஸ்வநாதனின் (காசி) சாதனையை கௌரவப்படுத்தும் விதமாக தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மாவட்ட செயலாளர்கள் கூட்டமைப்பு சார்பில் அவருக்கு பாராட்டு விழா வேலூரில் நடைபெற்றது.



தமிழ்நாடு கிரிக்கெட் சங்க முன்னாள் செயலாளரும், சென்னை சூப்பர் கிங்ஸ் (சிஷிரி) அணியின் தலைமை செயல் அலுவலருமான கே.எஸ். விஸ்வநாதன் இந்திய கிரிக்கெட் மற்றும் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தினை சிறப்பாக வழி நடத்தியதை கௌரவப்படுத்தும் விதமாக அமெரிக்க நாட்டின் ஹார்ட்போர்டில் அமைந்துள்ள கிரிக்கெட் ஹால் ஆப் ஃபேம் (Cricket Hall of Fame) என்ற அருங்காட்சியகத்தில் கே.எஸ். விஸ்வநாதனின் திரு உருவப்படம் இடம்பெற்றுள்ளது. உலக அளவில் கிரிக்கெட் விளையாட்டிற்கு அற்பணிப்புடன் சேவை ஆற்றியவர்களை கௌரவப்படுத்தும் வகையில் இந்த அருங்காட்சியகம் செயல் பட்டு வருகிறது.

இந்த கௌரவம் பெற்றமைக்காக கே.எஸ். விஸ்வநாதன் அவர்களுக்கு தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மாவட்ட செயலாளர்கள் கூட்டமைப்பு சார்பில் வேலூரில் உள்ள ஒரு தனியார் மண்டபத்தில் இன்று பாராட்டு விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வருகை தந்தவர்களை தமிழ்நாடு கிரிக்கெட் சங்க தலைவர் டாக்டர் அசோக் சிகாமணி வரவேற்றார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் வேலூர் மாவட்ட தலைவரும் நறுவீ மருத்துவமனையின் நிறுவனத் தலைவருமான முனைவர் ஜி.வி.சம்பத் பங்கேற்று தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் மாவட்ட கிரிக்கெட் சங்க செயலாளர்கள் கூட்டமைப்பு சார்பில் கே.எஸ். விஸ்வநாதனுக்கு பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு வழங்கி பாராட்டி பேசினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் முன்னாள் செயலாளர் ஆர்.எஸ். இராமசாமி, துணை செயலாளர் டாக்டர் ஆர்.என். பாபா, முன்னாள் துணைத் தலைவர் சாம் பாபு. உதவி செயலாளர்கள் ஜூலியஸ் விஜயகுமார், மார்டின் ராஜ், வெங்கட்ராமன், வேலூர் மாவட்ட செயலாளர் ஸ்ரீதரன், தமிழ்நாடு கிரிக்கெட் சங்க செயலாளர்கள் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் மாரிஸ்வரன், மற்றும் கிரிக்கெட் சங்க இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், சாதனையாளர் விஸ்வநாதனை பாராட்டி வாழ்த்தி பேசினர்.

நிகழ்ச்சியில் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் போட்டிக்கான சுழற் கோப்பை அறிமுகப்படுத்தி தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத் தலைவர் டாக்டர் அசோக் சிகாமணியிடம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து. நிகழ்ச்சியில் சாதனையாளர் கே.எஸ். விஸ்வநாதனை கௌரவிக்கும் வகையில் சிறப்பு தபால் தலை வெளியிடப்பட்டதுடன், சாதனையாளர் விஸ்வநாதனின் 30 கிலோ எடை கொண்ட திரு உருவச்சிலை சங்க நிர்வாகிகள் வழங்க அதனை கே.எஸ். விஸ்வ நாதன் மற்றும் அவரது துணைவியார் விஜயா விஸ்வநாதன் பெற்றுக்கொண்டனர்.

இதில் ஜி.கே. வேர்ல்டு பள்ளி இயக்குனர் சந்தோஷ் காந்தி, சன்பீம் பள்ளி குழும தலைவர் முனைவர் ஹரிகோபாலன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். முடிவில் தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மாவட்ட செயலாளர்கள் கூட்டமைப்பு தலைவர் பி.கே.ஜி. சுப்பிரமணியம் நன்றி தெரிவித்தார்.

# பழனி அருகே ரேணுகாதேவி பள்ளியில் பானை வடிவத்தில் அமர்ந்து பொங்கல் திருவிழா கொண்டாடிய 5000 மாணவர்கள்

பழனி ஜன15

திண்டுக்கல் மாவட்டம் பழனி நெய்க்காரப்பட்டியில் அமைந்துள்ள ரேணுகாதேவி குழுமத்தின் பி.ஆர் சி. சிபிஎஸ் பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் 5500 க்கும் மேற்பட்டோர் பொங்கல் விழாவில் கலந்து கொண்டனர். மாணவ மாணவிகளுக்கு நம்மளுடைய பாரம்பரியத்தை நினைவுபடுத்தும் விதமாக



மஞ்சுவிரட்டு காளையின் வடத்தைப்பிடித்து உலா வருதல் மற்றும்.கண்ணைக் கட்டி பானை உடைத்தல். சிலம்பம் சுற்றுதல் நடைபெற்றன அதனைத் தொடர்ந்து பொங்கல் விழாவில் சிறப்பு நிகழ்வாக மாணவ மாணவியர்கள் ஒன்று கூடி பொங்கல் பானை வடிவத்தில் அமர்ந்து காட்சியளித்தனர். மற்றும் ஓவிய போட்டிகள் பேச்சுப் போட்டிகள் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. பள்ளியின் தாளாளர் ரஞ்சிதா ராமச்சந்திரன். ராஜ்மோகன். கிரிநாத் கலந்து கொண்டனர் மற்றும் இவ்விழாவை பவித்ரா சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு கல்வி நிர்வாகம் பரிசுகள் வழங்கினார்.

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருள்மிகு சுப்ரமணியசாமி திருக்கோயில் ஆருத்ரா தரிசனத்தை முன்னிட்டு நடராஜர் மற்றும் மாணிக்கவாசருக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனை அதனைத் தொடர்ந்து முருகனுக்கு அபிஷேகம் நடைபெற்றது இதில் கோயில் அறங்காவலர் கோவிந்த ராமு குருக்கள் நாகநாதன் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்..



Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161